DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | |
|---|---|---|
| Calendar | .. .. | **CC. 273/2020** |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | |
| Deposition of Witness for | | PW - 4<br>Prosecution<br>Court |

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : **திரு. குழந்தையன்** | Caste | : | |
| Father/Husband Name | : **திரு. சின்னபையன்** | Calling | : | கூலி |
| Village | : குன்னூர் | Religion | : | இந்து |
| Taluk | : பெத்தநாயக்கன்பாளையம் | Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

18.10.2023.

**சாட்சி வரவழைக்கப்பட்டு உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 03.03

1) நான் தற்பொழுது குன்னூரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் அண்ணாமலை, சின்னதுரை ஆகியோர்களை தெரியும் எனது உறவினர்கள். எதிரிகளும் எனது உறவினர்கள் ஆவார்கள்.

2) கடந்த 16.02.2020 அன்று இரவு சுமார் 07.30 மணியளவில் தடப்பிரச்சனை சம்மந்தமாக அண்ணாமலை குடும்பத்தாருக்கும், பாக்கியராஜ் குடும்பத்தாருக்கும் இடையே தகராறு நடந்தது. ஒருவரை ஒருவர் தாக்கி கீழே உருண்டு அடித்துக்கொண்டார்கள்.

3) எதிரி பாக்கியராஜ், சின்னதுரையின் காதை பிடித்து கடித்து, துப்பிவிட்டார். ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சின்னதுரையை நான் சிகிச்சைக்கு அழைத்து வந்தேன். பின்பு சின்னதுரையை மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை

**மறுவிசாரணை** - இல்லை

முடிவு நேரம் 03.12

Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct

Sd/-S. Munusamy. Bsc., B.L.,
Judicial Magistrate No.1,
Attur .

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | |
|---|---|---|
| Calendar | .. .. | **CC. 273/2020** |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | |
| Deposition of Witness for | | PW - 5 |
| | | Prosecution |
| | | Court |

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : **திரு. கோவிந்தராஜ்** | Caste | : | |
| Father/Husband Name | : **திரு. ஆண்டி** | Calling | : | கூலி |
| Village | : குன்னூர் | Religion | : | இந்து |
| Taluk | : பெத்தநாயக்கன்பாளையம் | Age | : | 23 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

18.10.2023.

**சாட்சி வரவழைக்கப்பட்டு உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**
துவக்க நேரம் 03.13

1) நான் தற்பொழுது குன்னூரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் அண்ணாமலை, வெள்ளச்சி, சின்னதுரை ஆகியோர்களை தெரியும் எனது ஊர்க்காரர்கள். எதிரிகளும் எனது ஊர்க்காரர்கள்.

2) தேதி, மாதம் ஞாபகம் இல்லை கடந்த 3 ஆண்டுகளுக்கு ஒருநாள் மாலை சுமார் 06.30 மணியளவில் நான் வீட்டில் இருந்தபொழுது அண்ணாமலை வீட்டின் அருகில் சண்டையிடும் சத்தம் கேட்டு, வந்துப்பார்த்தேன். அப்பொழுது எதிரி பாக்கியராஜ், அண்ணாலலையை கண்ணத்தில் அடித்தார். மேலும் பாக்கியராஜ், சின்னதுரையின் காதை பிடித்து கடித்து துப்பிவிட்டார்.

3) வெள்ளச்சிக்கும் அந்த சண்டையில் அடிப்பட்டது யார் அடித்தார்கள் என்று தெரியவில்லை. அண்ணாலலை, வெள்ளச்சி, சின்னதுரை ஆகியோர்களை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை

**மறுவிசாரணை** - இல்லை

முடிவு நேரம் 03.18

Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct

Sd/-S. Munusamy. Bsc., B.L.,
Judicial Magistrate No.1,
Attur .

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | |
|---|---|---|
| Calendar | .. .. | **CC. 273/2020** |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | |
| Deposition of Witness for | | PW - 6<br>Prosecution<br>Court |

| | | | |
|---|---|---|---|
| Name | : **திரு. சின்னாண்டி** | Caste | : |
| Father/Husband Name | : **திரு. ஆண்டி** | Calling | : விவசாயம் |
| Village | : குன்னூர் | Religion | : இந்து |
| Taluk | : பெத்தநாயக்கன்பாளையம் | Age | : 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

18.10.2023.

**சாட்சி வரவழைக்கப்பட்டு உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 03.15

1) நான் தற்பொழுது குன்னூரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் ஞாபகம் இல்லை சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் காலை 10 மணியளவில் நான் தண்ணீர் எடுத்து விடுவதற்காக எங்கள் ஊரில் உள்ள தண்ணீர் டேங்கிற்கு சென்றிருந்தேன். அப்பொழுது போலீசார் வந்தார்கள் என்னிடம் நாங்கள் வந்து சென்றதற்கு அட்தாட்சியாக சாட்சி கையெழுத்து போட சொல்லி கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான் (பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து மட்டும அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது) வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி, குவிமுச பிரிவு 161(3)ன் கீழான வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்திருப்பதால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யவேண்டி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனக்கு இரண்டு மகன்கள் ஒரு மகன் உள்ளனர் என்றால் ஆமாம். சாட்சி அண்ணாமலை மற்றும் எதிரி ஆண்டி ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்றால் எனது சித்தப்பாகளின் மகன்கள் ஆவார்கள்.

2) இரண்டு தரப்பினருக்கும் இடையே தட வழி சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறதா என்றால் ஆமாம். இரண்டு தரப்பினர்களுக்கும் இடையே 16.02.2020 அன்று மாலையில் சண்டை நடந்தது பற்றி நான் கேள்விப்பட்டேன் என்றால் ஆமாம். அடிதடி தகராறு சம்மந்தமாக விசாரிக்க அண்ணாமலை வீட்டிடம் போலீசார்கள் வந்தார்கள் என்றால் ஆமாம்.

3) அந்த இடத்தில் போலீசார் படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள் என்றால் ஆமாம். போலீசார் தயார் அந்த இடத்தில் தயார் செய்த அவணத்தில் நானும், ராமனும் கையெழுத்து செய்தோம். ராமன் கையெழுத்து செய்தது எனக்கு தெரியாது. நான் கையெழுத்து செய்தேன்.

4) எதிரிகள் தனது நெருங்கிய உறவினர்கள் என்பதால் எதிரிகளை இந்த வழக்கில் இருந்து காப்பாற்ற எதிரிகளுக்கு ஆதரவாக முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளுக்கு முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

முடிவு நேரம் 03.28

Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct

Sd/-S. Munusamy. Bsc., B.L.,
Judicial Magistrate No.1,
Attur .